ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1890/2 - 2014 නොවැම්බර් මස 24 වැනි සඳුදා - 2014.11.24

*1890/2 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தல் தொடர்பாக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களால் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டு நெறிகள்*

**அறிமுகம் :**

வானொலி, தொலைக்காட்சி மற்றும் அச்சு ஊடகங்கள் மூலமாகக் கருத்துக்களை வெளியிடுதல் மற்றும் தகவல்களை அறிக்கையிடுதல், பிழையின்றியும் மற்றும் பக்கச் சார்பின்றியும் மேற்கொள்ளப்படுவது சனநாயகத்தின் முக்கியமான அடிப்படை இலட்சணமொன்று போலவே இயல்பொன்றுமாகும். ஊடக நிறுவனங்கள் தமது சுதந்திரத்தைப் பயன்படுத்தும் விதம், ஒட்டுமொத்தமாக சமூகத்திற்கும் பொதுமக்களுக்கும் சேவை செய்வதற்காகவிருத்தல் வேண்டும். ஊடக நிறுவனங்களின் அலுவல்களைத் தொழில் மட்டத்தில் பேணிச் செல்வதற்கு நேயர்கள், வாசகர்கள் மற்றும் இரசிகர்களின் உரிமைகளை உயர்வாக மதித்தல் வேண்டும். பொது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு மதிப்பளித்து தகவல்கள், கல்வி மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளை முன்வைத்தல் வேண்டும். பொது மக்களுக்குத் தேவையான விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்கள் நியாயமான விதத்தில் நடாத்தப்படுதல் வேண்டும். அதேபோன்று செய்திகளை அறிக்கையிடல் மற்றும் ஆசிரியர் கருத்துக்களை முன்வைத்தல் என்பன பக்கச் சார்பின்றியிருப்பது முக்கியமானதாகும்.

கருத்து வேறுபாடுகளுக்குரிய விடயங்கள் தொடர்பாகக் கருத்துக்களை வெளியிடும்போது பிரச்சினையின் இரு பக்கங்களும் பிரதிநிதித்துவம் செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறான விடயங்கள் தொடர்பாக தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஆட்கள், கட்சிகள் மற்றும் அமைப்புகள் வாய்ப்பொன்றைக் கோருமிடத்து, அத்தகைய கோரிக்கைகளுக்கு போதுமான காலத்தை/சந்தர்ப்பத்தை வழங்குவதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

சனநாயக நடைமுறைகளுக்குள் பொது மக்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கும் மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் சனாதிபதி வேட்பாளர்களுக்கு அறிவூட்டுவதற்குள்ள வாய்ப்பைப் பாதுகாப்பற்கும், தேர்தல்கள் காலக் கெடுவினுள் ஊடகங்களுக்கு விசேடமான பொறுப்பொன்றுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எதிர்பார்ப்புக்களை மையமாகக் கொண்டு, கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் எதிர்வரும் தேர்தல் காலக் கெடுவினுள் ஊடக நிறுவனங்களால் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டு நெறிகளைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதினெட்டாம் திருத்தத்தினால் திருத்தியமைக்கப்பட்ட பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் 104 (ஆ)(5)(அ) ஆம் உறுப்புரை மற்றும் தேர்தலோடு தொடர்புடைய வேறு சட்டதிட்டங்கள் என்பவற்றின் கீழ் தேர்தல்கள் ஆணையாளர், மஹிந்த தேசப்பிரிய ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள், பொறுப்புக்கள், கடமைகள் என்பவற்றிற்கிணங்க நீதியானதும் சுதந்திரமானதும் மற்றும் இரகசியமானதுமான தேர்தலொன்று நடாத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களால் பின்பற்றப்பட வேண்டிய கீழ்வரும் வழிகாட்டு நெறிகளை இத்தால் வெளியிடுகின்றேன்.

(1) செய்திப் பத்திரிகைகளில் இடங்களைக் குறித்தொதுக்குகையிலோ அல்லது வானலைக் காலத்தை வழங்குகையிலோ எந்தவோர் வேட்பாளரொருவருக்கும் அல்லது கட்சித் தலைவருக்கும் வேறுபாடு காட்டப்படக் கூடாதென்பதோடு, சனாதிபதித் தேர்தல்கள் தொடர்பாக அறிக்கையிடுகையில் அனைத்து அச்சு, தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடக நிறுவனங்கள் சமநிலைத் தன்மையையும் கட்சி சார்பற்ற போக்கையும் கடைப்பிடித்தல் வேண்டும்.

(2) செய்திகளையும் மற்றும் நிகழ்கால விடயங்களை பிரசுரிக்கின்றபோது அனைத்து ஊடக நிறுவனங்களும் சரியானதாகவும் சமநிலை பேணுபவையாகவும் பக்கச் சார்பற்றவையாகவும் நடந்து கொள்ளல் வேண்டும்.

(3) செய்திப் பத்திரிகைகளின் ஆசிரியர் கருத்தொன்று குழப்ப நிலையைக் கொண்டதாகவோ சமநிலைத் தன்மையற்றவொன்றாகவோ காணப்படுகின்ற போது வேறுபாட்டுத் தன்மை நிலவ முடியுமாதலால் ஆசிரியர் கருத்தொன்றை இலத்திரனியல் ஊடகம் ஊடாக ஒளிபரப்பக்கூடாது. ஆயினும் ஏதேனுமொரு காரணத்தினால் ஆசிரியர் கருத்தினை ஒளிபரப்பினால் அதற்கு எதிராக கருத்துக்களையும் தெரிவிக்க அனுமதி கோரினால் அக்கருத்துக்களை ஒலி/ஒளிபரப்பும் கடப்பாடு அந்நிறுவனத் திற்குண்டு.

(4) தேர்தல் காலப்பகுதியில் சமநிலையற்ற நிகழ்ச்சிகள் ஒலி/ஒளிபரப்புச் செய்யாமலிருப்பது அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களின் செய்திப் பிரிவுகள் மற்றும் நடப்பு செய்திகளுக்குப் பொறுப்பான பிரிவுகளின் பொறுப்பாகும்.

(5) ஏதேனுமொரு சம்பவமோ அல்லது நிகழ்ச்சியோ பற்றிய விடயங்களை ஒலி/ஒளிபரப்புச் செய்கையில் ஏதேனுமொரு வேட்பாளரின் கருத்துக்களை சமர்ப்பிக்கின்ற போது அவ்விடயங்கள் தொடர்பான அக்கறையொன்றையோ அல்லது ஆர்வமொன்றையோ காட்டுகின்ற அல்லது அவ்விடயத்தினால் பாதிப்பொன்று ஏற்படக்கூடிய ஏனைய கட்சிகளுக்கும் அச்செய்தியின் ஒலி/ஒளிபரப்பப்படுகின்றபோதோ அல்லது நிழச்சியின் போதோ விடயங்களை முன்வைக்க சந்தர்ப்பமொன்று அளிக்கப்படல் வேண்டும். அத்தினத்தன்றே அச்சந்தர்ப்பத்தை வழங்க முடியாதெனில் அதற்கடுத்த தினம் அதற்கான வாய்ப்பை வழங்குதல் வேண்டும்.

(6) எந்தவொரு விவரண நிகழ்ச்சியோ அல்லது விஷேட நிகழ்ச்சியோ தேர்தல் சமயத்தில் ஒலி/ஒளிபரப்புகின்ற போது பிரதியாக்குநர், அறிவிப்பாளர் மற்றும் தயாரிப்பாளரின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

(7) முன்னைய சந்தர்ப்பங்களில் ஒலி/ஒளிபரப்பப்பட்ட கலந்துரையாடல்கள், விவாதங்கள் மற்றும் அத்தகைய நிகழ்ச்சிகள் முதலியவற்றை தேர்தல் தினத்திற்கு முன்னரான 48 மணித்தியாலங்களுக்குள் மீள் ஒலி/ஒளிபரப்புச் செய்வதோ வெளியிடுவதோ கூடாது.

(8) சனாதிபதி தேர்தல் முடிவடையும் வரை சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு எதிராக நிரூபிக்க முடியாத குற்றச்சாட்டுக்களை செய்தி ஒலி/ஒளிபரப்புக்களிலோ அல்லது நிகழ்ச்சிகளிலோ வெளியிடப்படக்கூடாது.

(9) கடமை ரீதியான வைபவங்கள் மற்றும் குற்றங்கள் போன்ற வாக்கெடுப்போடு தொடர்பற்ற செய்திகளைப் பரப்புகின்றபோது அதன் மூலம் வேட்பாளரொருவருக்கு இலாபமொன்று அல்லது பாதிப்பொன்று ஏற்படாதவாறு அனைத்து ஊடக நிறுவனங்களும் நுணுக்கமாகவும் சாதுரியமாகவும் நடந்து கொள்ளல் வேண்டும்.

(10) சனாதிபதியவர்களோ அல்லது பிரதம மந்திரி அவர்களோ அல்லது அரசாங்கத்தின் அமைச்சர்களோ தொடர்புபடுகின்ற அரசியல் கருத்துக்களை/கொள்கைகளை வெளிப்படுத்துகின்ற தொலைக்காட்சி/வானொலி நிகழ்ச்சிகள் அவர் சார்ந்த கட்சியின் நிகழ்ச்சியொன்றாகக் கருதப்பட வேண்டுமென்பதோடு, அதன் காரணமாக அதற்கெதிரான கருத்தையுடைய அரசியற் கட்சிகளின் தலைவர்களுக்கும் அதற்குச் சமமான நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குதல் வேண்டும். அச்சு ஊடகங்களும் அதே விதத்தில் அரசியற் கட்சிகளுக்கு விஷேட கலந்துரையாடல்களையும் வழங்குகின்ற போது கட்சிக் கூட்டங்கள் பற்றி அறிக்கை வெளியிடுகின்ற போது சம அந்தஸ்த்தையும் முக்கியத்துவத்தையும் வழங்குதல் வேண்டும்.

(11) ஏதேனுமொரு வேட்பாளரொருவருக்கு விஷேட கவனம் செலுத்தி ஊக்குவிப்பான விதத்திலோ அல்லது வேறு வேட்பாளர்களுக்கு பாதிப்பொன்று நேரிடும் விதத்திலோ வானலைக் காலத்தை இன்றேல் செய்திப் பத்திரிகையின் இடவசதிகளைக் குறித்தொதுக்குதல் மேற்கொள்ளலாகாது.

(12) போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரை ஊக்குவிக்கக் கூடியதான அரச அலுவலர்களால் நடாத்தப்படும் உரைகள், நேர்காணல்கள் போன்ற நிகழ்ச்சிகளைப் பிரச்சாரம் செய்வதிலிருந்து அனைத்து ஊடகங்களும் தவிர்ந்திருத்தல் வேண்டும்.

(13) குழுக் கலந்துரையாடல்களில் பங்கேற்பவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற போது அனைத்து இலத்திரனியல் ஊடக நிறுவனங்களும் நியாயமாக நடந்து கொள்ள வேண்டியதோடு, கலந்துரையாடலின் உள்ளடக்கமும் சமநிலை கொண்டதாக இருத்தல் வேண்டும். ஏதேனும் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொள்ளும் முகவரொருவருக்கு உரிய மொழியில் பாண்டித்தியம் இல்லாமையால் அவருக்கு பாதிப்பு ஏற்படக் கூடியவாறு நிகழ்ச்சியை நடாத்தக் கூடாது. அச்சு ஊடகங்களில் நேர்கண்டு வெளியிடும் போது மொழிப் புலமை இன்மை காரணமாக கலந்துரையாடலில் கலந்து கொள்ளும் அரசியல்வாதிக்கு பாதிப்பு ஏற்படக்கூடியவாறு செயற்படக் கூடாது. தெளிவற்ற, புரிந்து கொள்ள முடியாத வினாக்களுக்கூடாகப் பெறப்பட்ட தகவல்களை வெளியிடக் கூடாது.

(14) தொலைபேசி மூலம் கேள்விகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொண்டு நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளின் போது, அனைத்து தொடர்பாளர்களுக்கும் அவர்களின் வினாக்களிலோ அல்லது முன்மொழிவுகளிலோ உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் எவையாயினும் சமமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படல் வேண்டும். அந்நிகழ்ச்சிகளின் சமநிலைத் தன்மைக்கு அந்நிகழ்ச்சிகளை நடாத்தும் அனைத்து அலுவலர்களும் வகை கூறுதல் வேண்டும்.

(15) எந்தவோர் இலத்திரனியல் அல்லது அச்சு ஊடக நிறுவனமொன்றின் தவிசாளரொருவர், பணிப்பாளர் சபை அங்கத்தினரொருவர் அல்லது ஊழியரொருவர் அரசியல் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபாடு கொண்ட ஒருவராக இருப்பின், அத்தகைய ஈடுபாடு சமநிலையான ஒலி/ஒளிபரப்பைப் பாதிக்கச் செய்யவல்ல சிக்கல்களைத் தோற்றுவிக்க ஏதுவாக அமையலாம். ஆதலால் கீழ்வரும் விடயங்கள் முகாமைத்துவத்தின் கவனத்திற்கு உரிய அலுவலர்கள்/ஊழியர்களால் கொண்டு வரப்படல் வேண்டும்.

(அ) அத்தகையவர்களின் ஈடுபாட்டின் அளவு;
(ஆ) அத்தகையவர்களின் தொழிலின் இயல்பும் மட்டமும் ;
(இ) நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்ற போது அத்தகையவர்களின் ஈடுபாட்டின் பரப்பெல்லை.

(16) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் முக்கிய பதவியொன்றை (தலைவர், தவிசாளர், செயலாளர், தேசிய அமைப்பாளர், பொருளாளர், பிரதித் தலைவர், சிரேட்ட பிரதித் தலைவர் அல்லது அதற்கு சமமான அதிகாரம் கொண்ட) வகிக்கின்ற நபரொருவர் ஊடக நிறுவனமொன்றில் பணிப்பாளர் சபைத் தலைவர், பணிப்பாளர் சபை அங்கத்தவர், பிரதம நிறைவேற்று/பிரதம ஆசிரியர் போன்ற முக்கிய பதவியொன்றை வகிக்கும் போது அந்நபர் சனாதிபதித் தேர்தல் வேட்பாளராகப் போட்டியிடுவாராயின் அல்லது அவர் முக்கிய பதவியொன்றை வகிக்கும் கட்சி தேர்தலில் நேரடியாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட முன்னணியாகப் போட்டியிடுமாயின் அத்தேர்தல் காலக்கெடுவினுள் அவர் ஊடக நிறுவனத்திற்குரிய பதவியில் மும்முரமாக ஈடுபடுவதைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். இன்றேல் அவ்வூடகத்தின் நெறிப்படுத்தல் பணிகளைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். மேலும் ஏதேனும் தேர்தலொன்றில் போட்டியிடும் கட்சியொன்றின் முக்கிய பதவியொன்றை வகிக்கும் நபரொருவர் அல்லது தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் நபரொருவர் அத்தேர்தல் காலக்கெடுவினுள் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்களில் அரசியல் சார்பான நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டுமென்பதோடு, அச்சு ஊடகமொன்றில் நிரந்தர பணியில் ஈடுபட்டிருப்பாராயின் அவ்வூடகத்தினூடாக தனது அரசியல் சார்பான கடிதங்களைப் பிரசுரிப்பதிலிருந்தும் தவிர்த்து கொள்ளல் வேண்டும்.

(17) ஏதேனுமோர் ஊடக நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கலந்துரையாடலில் அல்லது செவ்வியில் பங்குபற்ற எவரேனுமொரு நபர் மறுக்கின்ற சந்தர்ப்பமொன்றில் மற்றும் அவ்வாறு மறுப்பதற்கான காரணங்களை முன்வைக்காத சந்தர்ப்பத்தில் ஊடக நிறுவனத்தினால் அத்தகைய நிலைமைகளுக்கு கண்ணியமளிக்கப்படல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்களில் வெற்றுக் கதிரையொன்றைக் காட்டுவது போன்ற நாடகப் பாணியிலான உத்திகளுக்குப் பதிலாக நேரடியாக மற்றும் எளிய அறிவித்தலொன்றின் மூலம் அதனை வெளிப்படுத்துவது பொருத்தமாகும்.

(18) கருத்து கணிப்பொன்றின் முடிவுகளை இலத்திரனியல் ஊடகமொன்றின் ஊடாக ஒளிபரப்புகையில் அல்லது அச்சக ஊடகமொன்றில் பிரசுரிக்கின்ற போது அக்கருத்துக் கணிப்பை நடாத்திய அமைப்பை அறிமுகப்படுத்தல், அப்பணி பொறுப்புவிக்கப்பட்ட மற்றும் அதற்காக நிதி ஒதுக்கீடு வழங்கிய நிறுவனம் அல்லது நபர், பயன்படுத்தப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை, தவறுகளின் எல்லை மற்றும் களத்தில் பணியாற்றிய நாட்கள் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். கருத்துக் கணிப்பு நடாத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய மக்கள் கருத்து மாத்திரம் இதன் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளதென ஒலி/ஒளிபரப்பாளர் குறிப்பிடுதல் வேண்டும்.

(19) போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரினால் வேறு வேட்பாளரொருவரின் வெற்றியை ஊக்குவிக்கக் கூடியதாக வெளியிடப்படுகின்ற கருத்துக்களை பிரச்சாரம் செய்யக்கூடாது.

(20) தேர்தல்கள் ஆணையாளரினால் வழங்கப்படும் எழுத்து மூலமான அனுமதியின்றி வாக்கெடுப்பு நிலையத்தினுள் அல்லது அஞ்சல் வாக்களிப்பு நிலையத்தினுள் புகைப்படம் பிடித்தல், கானொளிக் காட்சிகளை எடுத்தல் (வீடியோ) என்பன தடை செய்யப்பட்டுள்ளதால் அவ்வாறு செய்வதிலிருந்து சகல ஊடகவியலாளர்களும் தவிர்ந்து கொள்ளல் வேண்டுமென்பதோடு சட்டவிரோதமாக எடுக்கப்படும் புகைப்படங்கள்/கானொளிக் காட்சிகளை (வீடியோ) பத்திரிகைகளில் பிரசுரித்தல் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் காட்சிப்படுத்தல் என்பவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

(21) தேர்தல்களோடு தொடர்புடைய வேட்பாளரொருவரின் பிரச்சார நடவடிக்கைகளில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களினால் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வாக்குறுதிகள் தொடர்பாக வாக்காளர் நடுநிலையிலிருந்து கருத்திலெடுக்க முடிந்தவாறு அமைதியான சூழ்நிலையொன்றை வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னர் ஏற்படுத்துவது முக்கியமாதலால் சனாதிபதித் தேர்தல் தினத்திற்கு முன்னரான 48 மணித்தியாலத்திற்குள் தேர்தலோடு தொடர்புடைய கலந்துரையாடல், வாதவிவாதங்கள், வர்த்தக அறிவித்தல்கள் என்பவற்றைப் பிரச்சாரம் செய்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளல் வேண்டும். அச்சு ஊடகங்களுக்கும் இது பொருந்தும்.

2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலின் முடிவுகள் வெளியிடப்படும் வரை இவ்வழிகாட்டு நெறிகளுக்கு இசைவாகச் செயற்பட்டு அதாவது இவ்வழிகாட்டு நெறிகளைப் பின்பற்றி நீதியானதும் மற்றும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைத்து அச்சு, இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் நிருவாகிகளும் தயவன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2014. 11.24 ஆந் திகதி.

12-650

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.